

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க மதுரை எம்ஜிஆர் பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை மண்டலம்) சார்பாக 39 புதிய பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்து, பத்தாண்டுகள் விபத்தின்றி பேருந்து இயக்கிய 10 ஓட்டுனர்களுக்கு 100 கிராம் வெள்ளி நாணயம் மற்றும் சான்றிதழ்களை வழங்கிய போது எடுத்தபடம். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குனர் (மதுரை மண்டலம்) ஆ.ஆறுமுகம், மாநகராட்சி மண்டலத் தலைவர்கள் வாசுகி சசிக்குமார், புவனேஷ்வரி சரவணன், மாவட்ட அறங்காவல்குழு துணைத் தலைவர் வீரராகவன், முன்னாள் வாரிய தலைவர் அக்ரி கணேசன், தொமுச மேலூர் அல்போன்ஸ் மற்றும் கழக நிர்வாகிகள், அதிகாரிகள், பொதுமக்கள் பங்கேற்றனர்



கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தமிழகம் முழுவதும் காலை உணவுத் திட்டத்தை அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு தொடங்கி வைத்தார்கள்.முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி மானூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட பள்ளிக்கோட்டை ஊராட்சி ஆளவந்தான்குளம் அந்தோணியார் மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் குழந்தையேசு ஏற்பாட்டில் தட்டு,டம்ளர்,காணார் பட்டி ஊராட்சி டி.டி.டி.ஏ.தூய யோவான் நடுநிலைப் பள்ளியில் மாவட்ட இளைஞர்ணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன் ஏற்பாட்டில் தட்டு,டம்ளர் ஆகியவையும்,அதனைத் தொடர்ந்து நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் காலை உணவு திட்டத்தை பள்ளி மாணவ, மாணவிகளுக்கு வழங்கி துவக்கி வைத்தார்.நிகழ்வில் மாநில மகளிர் தொண்டரணி துணை துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாவட்ட துணைச்செயலாளர் கிரிஜா குமார்,மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் அருள்மணி, முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் மணி,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன், ஒன்றிய கவுன்சிலர் இன்பராஜ், மாவட்ட விவசாய அணி தலைவர் போத்திக்கண்ணு, இலக்கிய அணி தலைவர் நெல்லை ரவி,துரைப்பாண்டி, காளியப்பன்,நயினார்,கீர்த்தி, செண்டு,ராபர்ட் ,கிறிஸ்துராஜா, செல்லதுரை,பால்பாண்டி, ஜெயபால்,கிங் சிங்,கமல் உள்பட கழகத்தினர் மற்றும் ஊர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### திண்டுக்கல் மாவட்டம் – கள்ளி மந்தையத்தில்

# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்!

## அமைச்சர் அர.சக்கரபாணி தொடங்கி வைத்தார்!

*திண்டுக்கல், ஜூலை 17-*

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அரசு உதவிபெறும் தொடக்கப்பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை, திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், கீழச்சேரி, அரசு உதவி பெறும் புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் நேற்று முன்தினம் (15.07.2024) தொடங்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி திண்டுக்கல் மாவட்டம், கள்ளிமந்தையம் சி.எஸ்.ஐ. அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவர்களுக்கென பல்வேறு திட்டங்களை வகுத்து அதனை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். அனைத்து மாணவர்களும் எந்த காரணத்தை கொண்டும் கல்வியில் இடைநிற்றல் கூடாது என்பதில் தமிழக அரசு மிக கவனமாக செயல்பட்டு வருகிறது. நகரப் பகுதி மற்றும் கிராம பகுதிகளில் பள்ளிக்குச் செல்லக்கூடிய குழந்தைகள் காலையிலேயே புறப்பட்டு விடுவதாலும், சிலருடைய குடும்ப சூழல் காரணமாகவும் பெரும்பாலான குழந்தைகள் காலை உணவினை முறையாக சாப்பிடுவதில்லை என்பதால், அரசு பள்ளி மாணவர்களுக்கு காலை நேரத்தில் சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. மாணவ, மாணவிகள் பசியின்றி பள்ளிக்கு வருதல், ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்படாமல் இருத்தல், ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல், பள்ளிகளில் மாணவர்களின் வருகையை அதிகரித்தல், வேலைக்கு செல்லும் தாய்மார்களின் பணிச்சுமையை குறைத்தல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாக கொண்டு முதலமைச்சரின் காலை உணவு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. குடும்ப சூழ்நிலை காரணமாக பெரும்பாலான குழந்தைகள் பள்ளிக்கு வரும் போது காலை உணவு சாப்பிடாமல் வருகின்றனர் என்பதை அறிந்து, அவர்களின் வயிற்றுப்பசியை நீக்க இத்திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் .க.ஸ்டாலின் அவர்கள், தமிழகத்தில் அரசு தொடக்கப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை 15.09.2022 அன்று மதுரையில் தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, இத்திட்டத்தை தமிழகம் முழுவதும் அனைத்து அரசு தொடக்கப்பள்ளிகளிலும் செயல்படுத்தும் பணியை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 25.08.2023 அன்று திருக்குவளையில் தொடங்கி வைத்தார்கள். இதன்மூலம் 31,008 அரசு தொடக்கப்பள்ளிகளில் பயிலும் 18.50 இலட்சம் மாணவ, மாணவிகள் பயனடைகின்றனர்.

இத்திட்டத்தின் வாயிலாக திண்டுக்கல் மாவட்டத்தில் 1153 பள்ளிகளில் பயிலும் 47,720 மாணவ, மாணவிகளுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் மட்டும் காலை உணவுத்திட்டத்தில் 156 பள்ளிகளைச் சேர்ந்த 11,091 மாணவ, மாணவிகள் பயனடைந்து வருகின்றனர். மேலும், இன்று முதல் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் 15 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளைச் சேர்ந்த 701 மாணவ, மாணவிகள் பயனடையவுள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அரசு உதவிபெறும் தொடக்கப்பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை, திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், கீழச்சேரி, அரசு உதவி பெறும் புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் நேற்று முன்தினம் (15.07.2024) காலை தொடங்கி வைத்தார்கள். அதன்படி, தமிழகத்தில் 3993 அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 2.23 இலட்சம் மாணவ, மாணவிகள் பயன் பெறுவர்.

ஆக மொத்தம் தமிழகம் முழுவதும் காலை உணவு திட்டத்தின் மூலம் மொத்தம் 20.73 இலட்சம் மாணவ, மாணவிகள் பயன் பெறுகின்றனர்.

பெருந்தலைவர் காமராஜர் மதிய உணவுத் திட்டத்தை கொண்டு வந்தார். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் வாரம் 5 முட்டைகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தினார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை செயல்படுத்தியுள்ளார்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, 1.14 கோடி பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 1.48 இலட்சம் நபர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளபட்டு வருகிறது. தகுதியுள்ள நபர்கள் அனைவருக்கும் கலைஞர் உரிமைத் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பெண்கள் நகர பேருந்துகளில் சென்றால் கட்டணமில்லா சலுகை வழங்கப்பட்டு வருகிறது. சுமார் 7 ஆயிரம் புதிய பேருந்துகள் இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்பட்டு வருகிறது.

அரசு பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து, உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டத்தில் மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினை விரிவுபடுத்தி மாணவர்களும் பயன்பெறும் வகையில் தமிழ் புதல்வன் திட்டம் நடப்பு கல்வியாண்டு முதல் செயல்படுத்தப்படவுள்ளது.

தமிழ்நாட்டினை குடிசை இல்லா மாநிலமாக உருவாக்க கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 8 இலட்சம் வீடுகள் கட்டிதர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில் முதற்கட்டமாக ஒரு இலட்சம் வீடுகள் தலா ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி வழங்கப்படவுள்ளது. மேலும், பழுதடைந்த வீடுகளை பராமரிக்க ரூ.2,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 2009 நியாய விலைக்கடைகள் பிரிக்கப்பட்டு புதியதாக முழுநேரம் மற்றும் பகுதிநேரம் நியாயவிலைக்கடைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதில் திண்டுக்கல் மாவட்டத்தல் 230 கடைகள் பிரிக்கப்பட்டுள்ளன. ஒட்டன் சத்திரம் தொகுதியில் மட்டும் 70 நியாய விலைக் கடைகள் பிரிக்கப்பட்டு புதிய நியாயவிலை க்கடைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்தவர்களில், தகுதியுள்ளவர்களுக்கு 15 நாட்களில் குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் தமிழ்நாட்டில் 16 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், நியாயவிலைக்கடைகளில் கைரேகை பதிவு மூலம் பதிவுகள் மேற்கொள்வதில் ஏற்படும் சிரமங்களை தவிர்க்க கண் கருவிழி பதிவுகள் மேற்கொள்ள 36,000 நியாய விலைக் கடைகளிலும் கண் கருவிழி பதிவு கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 10,000 கி.மீட்டர் நீளம் சாலைகள் ரூ.4,000 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டிலும் 10,000 கி.மீட்டர் நீளம் சாலைகளை மேம்படுத்த ரூ.4,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஊரகப் பகுதிகளில் உள்ள சாலைகளில் 2000 கி.மீட்டர் நீளம் சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளன. அதில் திண்டுக்கல் மாவட்டத்தில் 200 கி.மீட்டர் நீளம் சாலைகள் மேம்படுத்த அனுமதி பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அனைத்துத் தரப்பினரும் போற்றும் வகையில் நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், தொடங்கப்பட்ட நாள்முதல், மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு, நல்ல பயன் அளித்து வருகிறது. இதன்மூலம் அரசுப் பள்ளிகளில் மாணவ, மாணவிகள் சேர்க்கை அதிகரித்துள்ளதுடன், மாணவ, மாணவிகள் பசியின்றி கல்வி பயில வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறப்பு வாய்ந்த முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தமிழ்நாட்டு மக்களிடையே மட்டுமின்றி, பிற மாநிலம், வெளிநாட்டு மக்களிடையேயும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது, என மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 21 பயனாளிகளுக்கு தலா ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான ஆணை, பழுதடைந்த வீடுகளை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 12 பயனாளிகளுக்கு பணி ஆணை ஆகியவற்றை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்(மகளிர் திட்டம்) திட்ட இயக்குநர் நா.சரவணன், பழனி வருவாய் கோட்டாட்சியர் சௌ.சரவணன், மாவட்ட கல்வி அலுவலர் சண்முகவேல், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி தாகிரா, வேதா, வட்டாட்சியர்கள் சசி, முத்துச்சாமி, ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.



விருதுநகர் ஊராட்சி பகுதி பாண்டியன் நகரில் கே.கே.எஸ். எஸ்.என். பள்ளியில் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் காலை உணவுத் திட்டத்தைத் துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய சேர்மன் சுமதி ராஜசேகர் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரகப் பகுதிகளில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்தார். அதனையொட்டி பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நத்தம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவியருக்கு காலை உணவு திட்டத்தை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன்,துவக்கி வைத்தார். மேலும் கல்வி தந்தை காமராஜரின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் கமுதி வடக்கு ஒன்றிய செயலாளர் வி. வாசுதேவன், கமுதி வட்டார வளர்ச்சி அலுவலர் கோட்டை ராஜ், வட்டார கல்வி அலுவலர் சண்முகம், நத்தம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் தலைமை ஆசிரியர், ஆசிரியப் பெருமக்கள், அபிராமம் பேரூர் கழகச் செயலாளர் ஜாகிர் உசேன், மற்றும் கமுதி ஒன்றிய பெருந்தலைவர் தமிழ்ச்செல்வி போஸ். ஒன்றிய கவுன்சிலர் முருகன் பரமக்குடி மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, ஊராட்சி மன்ற தலைவர்கள் மாவட்ட பிரதிநிதி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தருமபுரி மாவட்டம் பாலக்கோட்டில்

# சாலை விபத்தில் காயமடைந்தவர்களுக்கு ஆறுதல் - நிதியுதவி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

*சென்னை, ஜூலை 17-*

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு, ஜெர்த்தலாவ் கிராமம், பாரதியார் நகர் அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் காயமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், ஜெர்த்தலாவ் கிராமம், பாரதியார் நகர் அருகில் 15.07.2024 அன்று மாலை சுமார் 05.30 மணியளவில் இரண்டு தனியார் பேருந்துகள் எதிர்பாராதவிதமாக நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில் இரண்டு பேருந்துகளிலும் பயணம் செய்த 21 நபர்கள் பலத்த காயமடைந்ததோடு இவ்விபத்தில் மேலும் பலர் காயமடைந்தனர் என்ற செய்தியினைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இந்த விபத்தில் காயமடைந்து தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்விபத்தில் காயமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்வதோடு, பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதி யிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தாலுகா ராஜகம்பீரம் புனித மரியன்னை தொடக்கப்பள்ளியில் தமிழக முதல்வரின் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிக்கான காலை உணவுத்திட்டத்தினை திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏதுவக்கிவைத்தார். இந்த நிகழ்ச்சியில் மானாமதுரை ஒன்றியக்குழு தலைவர் திருமதிலதாஅண்ணாதுரை, மானாமதுரை மேற்கு ஒன்றிய செயலாளர் எம்அண்ணாத்துரை, ஊராட்சி மன்றத்தலைவர் முஜிபூர்ரகுமான் ,காஜாமுகைதீன், மரு.சாகுபர்சாதிக்,, முருகன் ,ஆரோக்கியசாமி,அழகர், மற்றும் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



இராஜபாளையத்தில் தளவாய்புரம் ஊராட்சி பு.மூ.மா.அம்மையப்ப நாடார் ஆரம்பப் பள்ளி மற்றும் கிருஷ்ணாபுரம் பெருந்தலைவர் காமராஜர் இந்து நாடார் தொடக்கப்பள்ளி போன்ற பள்ளிகளில் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கப்பாண்டியன், ஒன்றிய சேர்மன் ஜி.சிங்கராஜ் காலை உணவுத்திட்டத்தை தொடங்கி வைத்து குழந்தைகளுடன் அமர்ந்து காலை உணவு அருந்தினர்.இந்நிகழ்வில் மாவட்ட கல்வி அலுவலர் பிரபாகரன் ஊர்த்தலைவர் உதயசூரியன் பள்ளிதாளாளர் பிரகாஷ், கிருஷ்ணாபுரம் ஊர்த்தலைவர் செம்புலிங்கனார், பள்ளி தாளாளர் அய்யனார்பாண்டியன்,சேத்தூர் சேர்மன் பாலசுப்பிரமணியன், மாவட்ட கவுன்சிலர் முத்துச்செல்வி, கவுன்சிலர் காமராஜ், தலைமை ஆசிரியர்கள் பத்திரகாளி ஊராட்சி மன்ற தலைவர் முத்துச்சாமி, பேரூர்க் கழகச் செயலாளர் இளங்கோவன், கிளைச்செயலாளர்கள் சின்னதம்பி, தொந்தியப்பன், வைரவன், தங்கமணி, தங்கராஜ், லட்சுமணன், இளைஞரணி சுரேஷ், ஆதிதிராவிடர் அணி சேகர் மற்றும் கழக நிர்வாகிகள் மாணவ – மாணவியர்கள் ஆசிரியப்பெருமக்கள் கலந்து கொண்டனர்.